**தேர்வைத் துவங்கும் முன்னர், Announcement -14 ஐ ஒரு முறை முழுவதுமாகப் படித்துவிடுங்கள்.**

**All the Best!!!**

1) "சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன் / பங்கயக் கண்ணானைப் பாடேலோர் எம்பாவாய்" என்னும் பாடலடிகள் இடம்பெறும் இலக்கியம்?

A) திருவெம்பாவை B) திருப்பாவை C) நாச்சியார் திருமொழி D) திருவாசகம்

2) உலகத்து உயிர்களையெல்லாம் காப்பாற்றும் அரசரை எது காப்பாற்றும் என்கிறார் திருவள்ளுவர்?

A) அவரின் குறையாத வீரம் B) அவரின் குறையாத செல்வம்

C) அவரின் அன்பான குடிமக்கள் D) அவரின் குற்றமற்ற ஆட்சி

3) சுந்தரர் பற்றிய வாக்கியங்களில் தவறானது எது?

A) வன் தொண்டர், தம்பிரான் தோழர், நம்பியாரூரர் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றார்

B) பன்னிரு திருமுறைகளில் 7-வது திருமுறை சுந்தரர் அருளியது.

C) இவருடைய திருத்தொண்டத் தொகையை மட்டும் முதல்நூலாகக் கொண்டு சேக்கிழாரால் இயற்றப்பட்டதே பெரியபுராணம்

D) இவர் சைவ சமயக் குறவர்களில் மூன்றாமவர்

4) பொருத்துக:

1. நோன்றல் - அ) நல்லறிவு

2. ஓர்தல் - ஆ) அறியாமை இருள்

3. கலி - இ) பொறுத்தல்

4. இசை - ஈ) நிலம்

5. வைப்பு - உ) புகழ்

A) 1-ஆ, 2-இ, 3-ஈ, 4-உ, 5-அ B) 1-இ, 2-அ, 3-ஈ, 4-உ, 5-ஆ

C) 1-ஆ, 2-இ, 3-அ, 4-உ, 5-ஈ D) 1-இ, 2-அ, 3-ஆ, 4-உ, 5-ஈ

5) நீலகேசி எந்த சமயத்தின் கருத்துக்களை வாதங்களின் அடிப்படையில் விளக்குகிறது?

A) சைவம் B) வைணவம் C) சமணம் D) பௌத்தம்

6) பொருந்தாதது?

A) தொல்காப்பியம் - 27 இயல்கள் B) நீலகேசி - 10 சருக்கங்கள்

C) நீதிநெறி விளக்கம் - 102 வெண்பாக்கள் D) மேற்கண்ட எதுவுமில்லை

7) பெயரெச்சம் அல்லாத சொல்?

A) அரிய B) கொண்டு C) படிக்கும் D) ஓடிய

8) "தொல்லை வினைதரு தொல்லை அகன்று / சுடர்க தமிழ்நாடே!" என்று பாடியவர்?

A) து.அரங்கன் B) பாரதிதாசன்

C) கவிமணி தேசிக விநாயகனார் D) பாரதியார்

ETW ACADEMY

9) Epigraph - என்பதன் பொருள்?

A) அகராதி B) சித்திர எழுத்து C) ஒலியன் D) கல்வெட்டு

10) வினை மரபுகளில் தவறாகக் கொடுக்கப்பட்டுள்ளது எது?

A) சோறு தின் B) பூக் கொய் C) பால் பருகு D) தண்ணீர் குடி

11) பொருத்துக.

1) க், ங் - அ) நாவின் இடை, அண்ணத்தின் இடை

2) ச், ஞ் - ஆ) நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி

3) ட், ண் - இ) நாவின் முதல், அண்ணத்தின் அடி

4) த், ந் - ஈ) நாவின் நுனி, அண்ணத்தின் நுனி

A) 1-ஆ, 2-இ, 3-ஈ, 4-அ B) 1-ஆ, 2-அ, 3-ஈ, 4-இ

C) 1-ஈ, 2-இ, 3-ஆ, 4-அ D) 1-இ, 2-அ, 3-ஈ, 4-ஆ

12) குறைந்த நீரில் பயிர்கள் விளையும் நிலம்?

A) பயன்நிலம் B) தரிசு C) நன்செய் D) புன்செய்

13) முற்காலத்தில் பாய்மரக் கப்பல்களில் பயன்படுத்தப்பட்டவை கூட பாய்கள் தான் என்பதை "கூம்பொடு மீப்பாய் களையாது" எனக் கூறும் நூல் எது?

A) அகநானூறு B) புறநானூறு C) பதிற்றுப்பத்து D) பட்டினப்பாலை

14) வாணிதாசனின் சிறப்புப் பெயர் அல்லாதது எது?

A) கவிஞரேறு B) தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த்

C) பாவலர்மணி D) பண்டிதமணி

15) "கரிகாலன் கல்லணையைக் கட்டினான்" என்பது?

A) தன்வினை வாக்கியம் B) செய்வினை வாக்கியம்

C) செய்தித் தொடர் D) மேற்கண்ட அனைத்தும்

16) கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால் / மற்றோர் அணிகலம் வேண்டாவாம் - முற்ற முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே / அழகுக்கு அழகுசெய் வார்" - என்னும் வரிகள் இடம்பெறும் நூல்?

A) நீதிநெறி விளக்கம் B) நீலகேசி C) நாலடியார் D) நான்மணிக்கடிகை

17) குமரகுருபரால் இயற்றப்படாத பிள்ளைத்தமிழ் நூல்கள் எவை?

1. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

2. குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்

3. திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்

4. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

5. சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

A) 1 & 4 B) 1, 2 & 4

C) 2, 3 & 5 D) 1 & 5

ETW ACADEMY

18) பொருந்தாதது எது?

A) ஐந்தாம் வேற்றுமை - மண்ணால் குதிரை செய்தான்.

B) ஆறாம் வேற்றுமை - பாரியினது தேர்

C) இரண்டாம் வேற்றுமை - வில்லை உடைத்தவன் ராமன்

D) நான்காம் வேற்றுமை - இராமனுக்குத் தம்பி இலக்குவன்.

19) தவறான தொடர் எது?

A) உடனிகழ்ச்சிப் பொருளில் நான்காம் வேற்றுமை வரும்

B) முதலாம் வேற்றுமை விளி வேற்றுமை என்று அழைக்கப்படுகிறது

C) இரண்டாம் வேற்றுமை உருபு எச்சொல்லுடன் இணைகிறதோ அச்சொல் பயனிலையாக மாறிவிடும்

D) மேற்கண்ட அனைத்தும்

20) தேவாரம் என்ற சொல்லை தே + வாரம் என்று பிரித்தால் கிடைக்கும் பொருள்?

A) இறைவனுக்குச் சூட்டப்படுகின்ற மாலை B) இனிய ஓசை பொருந்திய பாடல்

C) இறைவனுக்குப் பாடப்படும் பாடல் D) மேற்கண்ட எதுவுமில்லை

21) பாரதிதாசன் பின்வரும் எவ்வாறு பாரதியை புகழவில்லை?

A) பாட்டுக்கொரு புலவன் B) செந்தமிழ்த் தேனி

C) சிந்துக்குத் தந்தை D) புதிய அறம் பாட வந்த அறிஞன்

22) நந்தா விளக்கனைய நாயகியே! - முந்தை மொழிக்கெல்லாம் மூத்தவளே! என்று தமிழை போற்றுபவர்?

A) கவிமணி தேசிக விநாயகனார் B) பாரதியார்

C) து.அரங்கன் D) குமரகுருபர்

23) தலையை இடமாகக் கொண்டு பிறக்கும் எழுத்து எது?

A) உயிர் எழுத்துகள் B) ஆய்த எழுத்து

C) மெல்லின மெய்கள் D) வல்லின மெய்கள்

24) படி - என்ற வேர்ச்சொல்லின் வினையாலனையும் பெயர் என்ன?

A) படித்தோர் B) படித்தவர்

C) படித்தவன் D) மேற்கண்ட அனைத்தும்

25) பின்வரும் தொடர்களில் வியங்கோள் வினைமுற்றுக்குப் பொருந்தாதது எது?

A) இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும்.

B) ஒருமை பன்மை வேறுபாடு இல்லை.

C) வாழ்த்துதல், வைதல், வேண்டல் பொருளில் வரும் வியங்கோள் வினைமுற்று, தன்மை இடத்தில் வராது

D) விகுதி பெற்றே வரும்

26) ஓர்தல் தெளிவோடு ஒழுக்கம் இவையுண்டார் / பேர்த்த பிணியுள் பிறவார் பெரிதின்பமுற்றே - எனும் பாடல் இடம்பெற்ற நூல் எது?

A) நீதிநெறி விளக்கம் B) நீலகேசி C) தேவாரம் D) நாலடியார்

ETW ACADEMY

27) கவிமணி தேசிக விநாயகனார் பிறந்த ஊர் எது?

A) குன்றத்தூர் B) திருவெஃகா C) தேரூர் D) துள்ளம்

28) இவர் யார்?

1. 'செந்தமிழ் அந்தணர்' என்று அழைக்கப்படுபவர்
2. இலக்கண வரலாறு என்னும் நூலை இயற்றியவர்
3. தேவநேயம் என்னும் நூலைத் தொகுத்தவர்

A) பாவாணர் B) இரா. இளங்குமனார் C) பெருஞ்சித்திரனார் D) பரிதிமாற்கலைஞர்

29) கவிமணியின் நூல்களில் சேராதவை (து)?

1. மருமக்கள் வழி மான்மியம்
2. தமிழின்பம்
3. பொதுமை வேட்டல்
4. மலரும் மாலையும்
5. ஆசியஜோதி

A) 1 & 3 B) 2 & 4 C) 1 & 2 D) 2 & 3

30) இலக்கணக்குறிப்பு தருக: எடுத்தனன் உண்டான்

A) முற்றெச்சம் B) குறிப்புப் பெயரெச்சம்
C) தெரிநிலை வினைமுற்று D) ஏவல் வினைமுற்று

31) பின்வரும் எந்த உருபு ஐந்தாம் வேற்றுமையிலும் ஏழாம் வேற்றுமையிலும் உண்டு?

A) கண் B) இடம் C) இல் D) கால்

32) யாருடைய வாழ்க்கை நெருப்பின் அருகில் வைக்கப்பட்ட வைக்கோல்போர் போலக் கெடும் என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

A) துன்பம் வரும்போது வருந்துபவர் B) நடுவுனிலைமை இல்லாதவர்
C) கல்லாதவர் D) வருமுன் காவாதார்

33) பின்வருவனவற்றுள் குமரகுருபரரால் இயற்றப்படாத நூல் யாது?

A) கந்தர் கலிவெண்பா B) திருக்கயிலாயஞான உலா
C) சகலகலாவல்லி மாலை D) கயிலைக்கலம்பகம்

34) "கத்தியைத் தீட்டாதே - உந்தன் புத்தியைத் தீட்டு / கண்ணியம் தவறாதே - அதிலே திறமையைக் காட்டு!" என்ற உயரிய வரிகளை இயற்றியவர் யார்?

A) திரு. வி. கல்யாணசுந்தரனார் B) து.அரங்கன்
C) கவிமணி தேசிக விநாயகனார் D) ஆலங்குடி சோமு

35) நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி என்பார் யார்?

A) புத்தமித்திரனார் B) பவணந்தி முனிவர் C) வச்சிரணந்தி D) தொல்காப்பியர்

ETW ACADEMY

36) கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை, எல்லை ஆகிய பொருள்களில் வரும் வேற்றுமை?

A) ஐந்தாம் வேற்றுமை
B) ஏழாம் வேற்றுமை
C) நான்காம் வேற்றுமை
D) ஆறாம் வேற்றுமை

37) "கல்வி என்பது வருவாய் தேடும் வழிமுறை அன்று. அது மெய்மைகளைத் தேடவும் அறநெறியைப் பயிலவும் மனித ஆன்மாவுக்குப் பயிற்சியளிக்கும் ஒரு நெறிமுறையாகும்" என்று சொன்னவர் யார்?

A) முத்துலெட்சுமி ரெட்டி
B) விஜயலட்சுமி பண்டிட்
C) நிவேதிதா தேவி
D) அன்னிபெசன்ட்

38) திரு.வி.க அவர்கள் கூறியவற்றைக் கருத்தில் கொண்டு பொருத்துக

1. இயற்கை ஓவியம் - அ) கம்பராமாயணம்
2. இயற்கை இன்பக்கலம் - ஆ) பத்துப்பாட்டு
3. இயற்கை வாழ்வில்லம் - இ) கலித்தொகை
4. இயற்கைத் தவம் - ஈ) திருக்குறள்
5. இயற்கைப் பரிணாமம் - உ) சிந்தாமணி

A) 1-ஆ, 2-இ, 3-ஈ, 4-உ, 5-அ
B) 1-ஆ, 2-அ, 3-ஈ, 4-உ, 5-இ
C) 1-ஆ, 2-உ, 3-ஈ, 4-இ, 5-அ
D) 1-ஆ, 2-ஈ, 3-உ, 4-இ, 5-அ

39) "பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல் / அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை" என்னும் பாடல் இடம்பெற்ற சங்க இலக்கிய நூல் எது?

A) நற்றிணை
B) குறுந்தொகை
C) ஐங்குறுநூறு
D) கலித்தொகை

40) "ஏடன்று கல்வி; சிலர் எழுதும் பேசும் / இயலன்று கல்வி; பலர்க் கெட்டா தென்னும் வீடன்று கல்வி; ஒரு தேர்வு தந்த விளைவன்று கல்வி; அது வளர்ச்சி வாயில்" - என்றவர் யார்?

A) திரு.வி.கல்யாணசுந்தரனார்
B) ஞானக்கூத்தன்
C) மறைமலையடிகள்
D) குலோத்துங்கன்

41) கேட்பவரைத் தன்வயப்படுத்துவதும் கேளாதவரைக் கேட்கத் தூண்டுவதும் பின்வரும் எதன் இயல்பாகும் என திருவள்ளுவர் கூறுகிறார்?

A) சிறந்த இசையின்
B) சிறந்த பாடலின்
C) சிறந்த சொல்லாற்றலின்
D) சிறந்த கவிதையின்

42) பொருந்தாதது எது?

A) நேரிணை - வெள்ளைவெளேர்
B) எதிரிணை - வெற்றிதோல்வி
C) செறியிணை - பச்சைப்பசேல்
D) மேற்கண்ட எதுவுமில்லை

43) பின்வருவனவற்றுள் வினைமுற்று எந்த இடத்தில் வரும்?

A) ஐந்து பால்
B) மூன்று காலம்
C) மூன்று இடம்
D) மேற்கண்ட அனைத்தும்

ETW ACADEMY

44) வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைநிலைத் தொடர்களுள், அவை அல்லாத வேறு பிற சொற்களும் மறைந்து வருவது .................எனப்படும்.

A) பண்புத்தொகை B) வினைத்தொகை

C) எண்ணும்மை D) அன்மொழித்தொகை

45) பனைமரம் - இலக்கணக்குறிப்பு தருக

A) பண்புத்தொகை B) வினைத்தொகை

C) இருபெயரொட்டுப் பண்புத்தொகை D) அன்மொழித்தொகை

46) "நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் / கலந்த மயக்கம் உலகம் ஆதலின்" என்ற அடிகள் பயின்று வரும் நூல்?

A) தொல்காப்பியம் B) திருத்தணிகையுலா

C) தண்டியலங்காரம் D) யாப்பெருங்கலக்காரியை

47) இளமைப்பெயர்களைப் பொருத்துக.

1) புலி - அ) கன்று

2) சிங்கம் - ஆ) பறழ்

3) யானை - இ) குருளை

4) பசு - ஈ) குட்டி

5) ஆடு - உ) கன்று

A) 1-ஆ, 2-இ, 3-ஈ, 4-உ, 5-அ B) 1-ஆ, 2-இ, 3-அ, 4-உ, 5-ஈ

C) 1-இ, 2-ஈ, 3-ஆ, 4-உ, 5-அ D) 1-இ, 2-ஆ, 3-ஈ, 4-உ, 5-அ

48) மார்பை இடமாகக் கொண்டு பிறக்கும் எழுத்துகள் எவை?

A) உயிர் எழுத்துகள் B) ஆய்த எழுத்து

C) மெல்லின மெய்கள் D) வல்லின மெய்கள்

49) வாணிதாசனின் இயற்பெயர் என்ன? அவர் யாருடைய மாணவர்?

A) ரெங்கசாமி, பாரதிதாசன் B) எத்திராசலு, பாரதியார்

C) இராசகோபாலன், பாரதிதாசன் D) அரங்கசாமி, பாரதியார்

50) "அரசியல், அமைச்சியல், ஒழிபியல்" ஆகியவை எப்பாலின் இயல்கள்?

A) அறத்துப்பால் B) பொருட்பால்

C) இன்பத்துப்பால் D) மேற்கண்ட எதுவுமில்லை

51) கலித்தொகையில் அமைந்துள்ள மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை?

A) 401 B) 402 C) 150 D) 101

52) கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும் / நாவாயும் ஓடா நிலத்து - என்ற குறளில் காணப்படும் அணி?

A) பிறிதுமொழிதல் அணி B) உருவக அணி

C) வேற்றுமை அணி D) சிலேடை அணி

ETW ACADEMY

53) கற்றவர்க்கும் கல்லாதவருக்கும் இடையே உள்ள வேறுபாடானது, எவைக்கு இடையே உள்ள வேறுபாட்டிற்கு இணையானது

A) அரசனுக்கும் அந்தணருக்கும் B) வணிகருக்கும் வேளாளருக்கும்

C) மக்களுக்கும் விலங்குகளுக்கும் D) அறிவாளருக்கும் புல்லறிவாளருக்கும்

54) கல்லாமை ஒழிக - என்பது?

A) உணர்ச்சித் தொடர் B) விழைவுத்தொடர் C) கட்டளைத் தொடர் D) செய்தித்தொடர்

55) "தண்டுடுக்கை தாளந்தக்கை சாரநடம் பயில்வார்" என்ற பாடல் இடம்பெற்ற இலக்கியம் எது?

A) சம்பந்தர் தேவாரம் B) நாவுக்கரசர் தேவாரம்

C) சுந்தரர் தேவாரம் D) மாணிக்கவாசகர் வாசகம்

56) காலத்தை வெளிப்படையாகக் காட்டாது ______ஐ மட்டும் வெளிப்படையாகக் காட்டும் வினைமுற்று குறிப்பு வினைமுற்று எனப்படும்.

A) செய்பவரை B) இடத்தை C) குணத்தை D) தொழிலை

57) நோய் தீர்க்கும் மருந்துகளாக நீலகேசி கூறுவன?

A) நல்லறிவு, நற்காட்சி, நல்லொழுக்கம் B) நல்லறிவு, நற்காட்சி, நன்னெறி

C) நல்லறிவு, நன்னெறி, நல்லொழுக்கம் D) நன்னெறி, நற்காட்சி, நல்லொழுக்கம்

58) தமிழகப் பழங்குடிகள் எனும் நூலை இயற்றியவர் யார்?

A) பக்தவத்சல பாரதி B) செ.இராசு C) நா.வானமாமலை D) ராஜமார்த்தாண்டன்

59) பின்வருவனவற்றுள் கவிமணி படைத்த மொழிபெயர்ப்பு நூல் எது?

A) உமர்கய்யாம் பாடல்கள் B) அமீர்குஸ்ரு பாடல்கள்

C) தராஷூகோ பாடல்கள் D) கலீல் ஜீப்ரான் பாடல்கள்

60) வேர்பாரு; தழைபாரு மிஞ்சினக்கால் ______ பாரே என்றனர் சித்தர்கள்.

A) பற்பசெந்தூரம் B) கனி C) நவபாஷாணம் D) சஞ்சீவனம்

61) மனித மூளைக்குள் எத்தனை நியூரான்கள் உள்ளன?

A) நூறு கோடி B) பத்து கோடி C) ஆயிரம் கோடி D) பத்தாயிரம் கோடி

62) எழுதி வந்தான் - இலக்கணக்குறிப்பு தருக

A) குறிப்புப் பெயரெச்சம் B) குறிப்பு வினையெச்சம்

C) தெரிநிலை வினையெச்சம் D) தெரிநிலை பெயரெச்சம்

63) செயலையோ, காலத்தையோ தெளிவாகக் காட்டாமல் _____ஐ மட்டும் குறிப்பாகக் காட்டும் பெயரெச்சம் குறிப்புப் பெயரெச்சம் எனப்படும்.

A) பெயரை B) பண்பினை C) செய்பவரை D) பொருளை

64) பின்வரும் எது திரு.வி.க அவர்களின் நூல் அல்ல?

A) தமிழ்ச்சோலை B) முருகன் அல்லது அழகு C) பொதுமை வேட்டல் D) இனிமை விருந்து

ETW ACADEMY

65) 'ஆன்ற குடிப்பிறத்தல்' என்ற நூலை இயற்றியவர் யார்?

A) து.அரங்கன் B) பி.ச. குப்புசாமி C) பக்தவச்சல பாரதி D) வ.கீதா

66) ஒருவருக்குப் பின் எஞ்சி நிற்கும் புகழினாலும் பழியினாலும் அறியப்படுவது எது?

A) நடுவு நிலைமை B) கூடாஒழுக்கம் C) கல்லாமை D) குற்றங்கடிதல்

67) பி.ச.குப்புசாமி, _______ பல்லாண்டு என்ற நூலை இயற்றினார்

A) பாரதியோடு பல்லாண்டு B) புதுமைப்பித்தனோடு பல்லாண்டு

C) காந்தியோடு பல்லாண்டு D) ஜெயகாந்தனோடு பல்லாண்டு

68) ஆன்ற குடிபிறத்தல் என்றால் என்ன பொருள்?

A) சிறந்த குடியில் நீ பிறக்கவேண்டும்

B) சிறந்த குடியை அனைவரும் உருவாக்க வேண்டும்

C) சிறந்த குடியே சிறந்தது

D) சிறந்த குடி உன்னிடமிருந்து பிறக்க வேண்டும்

69) பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்தும் முறையை ............. என்பர்.

A) அணி B) வேற்றுமை C) எச்சம் D) குறுக்கம்

70) இல்வாழ்வு என்பது ____ என கலித்தொகை கூறுகிறது.

A) எல்லோர்க்கும் உதவுவது B) நல்லவர்க்கு உதவுவது

C) பகைவருக்கும் உதவுவது D) வறியவர்க்கு உதவுவது

71) கலித்தொகையைத் தொகுத்தவர்?

A) நல்லந்துவனார் B) மருதன் இளநாகனார் C) நல்லுருத்திரன் D) கபிலர்

72) "திருவை" என்பது?

A) பானை செய்யப்படும் மண் B) சக்கரத்தைச் சுழற்றும் கோல்

C) பானை செய்யும் சக்கரம் D) பானை வனைதல்

73) கைவினைப் பொருட்களுக்கு ஏற்ற மூங்கில் எது?

A) கல் மூங்கில் B) மலை மூங்கில் C) கூட்டு மூங்கில் D) காட்டு மூங்கில்

74) "நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப் / பாணன் சூடான் பாடினி அணியாள்" என்னும் பாடல் இடம்பெற்ற இலக்கியம் எது?

A) பரிபாடல் B) பதிற்றுப்பத்து C) புறநானூறு D) மதுரைக்காஞ்சி

75) ஆல்அலப்பு - எப்பழங்குடியினரின் மொழி?

A) தோடர்கள் B) படுகர்கள் C) குறும்பர்கள் D) காடர்கள்

76) காடர்களின் கதைகளை "யானையோடு பேசுதல்" என்னும் தலைப்பில் தமிழாக்கம் செய்தவர்?

A) வ. கீதா B) வெங்கம்பூர் சாமிநாதன்

C) பக்தவச்சல பாரதி D) புலவர் செ.இராசு

77) எழுத்தாளர் சுஜாதா அவர்களால் இயற்றப்படாத நூல்?

A) இனிய எந்திரா
B) மீண்டும் ஜீனோ
C) ஸ்ரீரங்கத்துத் தேவதைகள்
D) மின்சாரப்பூ

78) கீழ்க்கண்டவற்றில் மூளையின் இடது பகுதி எந்த செயலுக்கு உதவுகிறது?

A) கவிதை எழுதுதல்
B) பிரச்சனைகளை அலசுதல்
C) படம் போடுவது
D) நடனம் ஆடுவது

79) "சங்கொடு தாரை காளம் தழங்கொலி முழங்கு பேரி / வெங்குரல் பம்பை கண்டை வியன்துடி திமிலை தட்டி" என்னும் பாடல் எந்த இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளது?

A) கம்பராமாயணம்
B) பெருங்கதை
C) பெரியபுராணம்
D) சீறாப்புராணம்

80) "கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி" என்னும் தொடர் இடம்பெற்ற காப்பியம் எது?

A) வளையாபதி
B) குண்டலகேசி
C) சிலப்பதிகாரம்
D) மணிமேகலை

81) பஞ்சக்கும்மிகள் என்ற நூலைத் தொகுத்தவர் யார்?

A) சு.சக்திவேல்
B) நா. வானமாமலை
C) வெங்கம்பூர் சாமிநாதன்
D) புலவர் செ.இராசு

82) உருபுகள் இல்லாத வேற்றுமைகள் யாவை?

A) இரண்டாம், மூன்றாம்
B) நான்காம், ஐந்தாம்
C) முதலாம், எட்டாம்
D) ஆறாம், ஏழாம்

83) பரிவாதினி என்னும் வீணை எந்த பல்லவ மன்னனின் காலத்தில் புழக்கத்தில் இருந்ததாகக் கூறப்படுகிறது?

A) சிம்மவிஷ்ணு
B) மகேந்திரவர்மன்
C) நரசிம்மவர்மன்
D) நந்திவர்மன்

84) அச்சு கோர்ப்பதில் ஏற்படும் சிரமத்தைத் தவிர்க்க தமிழ் எழுத்துகளில் சில சீர்திருத்தங்களைச் செய்தவர்?

A) வீரமாமுனிவர்
B) பாரதியார்
C) பெரியார்
D) இராபர்ட் தி நோபிலி

85) களர்நிலம் போன்றவர் என வள்ளுவர் யாரைக் குறிப்பிடுகிறார்?

A) புலவர்கள்
B) கல்லாதவர்
C) பேரறிவாளர்
D) வலிமையற்றவர்

86) கொன்றைக்குழல், முல்லைக்குழல், ஆம்பல்குழல் எனப் பலவகையான குழல்கள் இருந்ததாக விளக்கும் நூல்?

A) சேந்தன் திவாகரம்
B) பிங்கல நிகண்டு
C) சிலப்பதிகாரம்
D) மணிமேகலை

87) தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற _____ காரணமாக அமைந்தது.

A) ஓவியக்கலை
B) இசைக்கலை
C) அச்சுக்கலை
D) நுண்கலை

88) பழங்காலத்தில் பகைவர்களின் ஆநிரையைக் கவரச்செல்லும்போது முழங்கும் பறை எது?

A) கோட்பறை
B) துடிபறை
C) அரிபறை
D) ஆகோட்பறை

ETW ACADEMY

89) கலித்தொகையின் ஓசை?

A) அகவலோசை B) தூங்கலோசை C) துள்ளலோசை D) செப்பலோசை

90) தமிழ் மொழியை எழுத இருவகை எழுத்துக்கள் வழக்கிலிருந்ததை நாம் எதன் மூலம் அறிகிறோம்?

A) ஆதிச்சநல்லூர் கல்வெட்டு B) சின்னமனூர்ச் செப்பேடு

C) குடுமியான்மலை கல்வெட்டு D) அரச்சலூர் கல்வெட்டு

91) "மண்ணமை முழவு" என்னும் தொடர் இடம்பெற்றுள்ள நூல் யாது?

A) திருமுருகாற்றுப்படை B) பெரும்பாணாற்றுப்படை

C) சிறுபாணாற்றுப்படை D) பொருநராற்றுப்படை

92) வாணிதாசனின் நூல் அல்லாதது?

A) கொடிமுல்லை B) எழிலோவியம்

C) தமிழச்சியின் கத்தி D) குழந்தை இலக்கியம்

93) பின்வரும் எது தொல்காப்பியத்தில் உள்ள அதிகாரம் அல்ல?

A) எழுத்து B) சொல் C) பொருள் D) அறம்

94) நோயின் தன்மை எத்தனை வகைப்படும் என்று நீலகேசி கூறுகிறது?

A) இரண்டு B) மூன்று C) ஐந்து D) எட்டு

95) "கல்வி கரையில கற்பவர் நாள் சில / மெல்ல நினைக்கின் பிணி பல - தெள்ளிதின் / ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப் / பாலுண் குருகின் தெரிந்த" - என்ற பாடல் இடம்பெறும் நூல் எது?

A) நீலகேசி B) நாலடியார் C) நீதிநெறி விளக்கம் D) ஏலாதி

96) எவ்வாறான சொற்களைத் தேர்ந்தெடுத்து பேசவேண்டும் என்கிறார் திருவள்ளுவர்?

A) கேட்பவருக்குப் புரியும்படியான சொற்களை B) யாருக்கும் தெரியாத சொற்களை

C) யாருக்கும் பொருள் புரியா சொற்களை D) யாராலும் வெல்ல முடியாத சொற்களை

97) நீலகேசியின் ஆசிரியர் யார்?

A) கணிமேதாவியார் B) நல்லாதனார்

C) காரியாசான் D) அறியப்படவில்லை

98) சமையலறையில் செலவிடும் நேரத்தை எதற்கு செலவிடும் நேரம் என்று கருதவேண்டும்?

A) சுவைக்கு B) நல்வாழ்விற்கு

C) சுத்தத்திற்கு D) மேற்கண்ட அனைத்தும்

99) பின்வருவனவற்றுள் திரு.வி.கல்யானசுந்தரனார் இயற்றிய நூல் (கள்) யாது?

A) மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் B) பெண்ணின் பெருமை

C) பொதுமைவேட்டல் D) மேற்கண்ட அனைத்தும்

100) "மாக்கண் முரசம்" என்று முரசு பற்றி பதிவுசெய்துள்ள பத்துப்பாட்டு நூல்?

A) மதுரைக்காஞ்சி B) நெடுநல்வாடை C) முல்லைப்பாட்டு D) குறிஞ்சிப்பாட்டு

ETW ACADEMY

**101)** ஆங்கிலேயருக்கும், ஹைதருக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை எது?

A) மைசூர் உடன்படிக்கை B) சென்னை உடன்படிக்கை

C) கர்நாடக உடன்படிக்கை D) பாரமஹால் உடன்படிக்கை

**102)** 1857 பெரும்புரட்சியின் உடனடிக் காரணமாக அமைந்த இராணுவத்தின் புதிய அறிமுகம் என்ன?

A) என்பீல்டு ரக துப்பாக்கி B) புல்லட் ரக துப்பாக்கி

C) தோலினால் ஆன தலைப்பாகை D) தோலினால் ஆன காலணி

**103)** ஜுன் 1801இல் 'திருச்சிராப்பள்ளி பிரகடனம்' என்றழைக்கப்பட்ட சுதந்திரப் பிரகடனம் ஒன்ற வெளியிட்டவர்(கள்)?

A) வேலுநாச்சியார் B) ஊமைத்துரை & செவத்தையா

C) மருது சகோதரர்கள் D) வேலுநாச்சியார்

**104)** 132 வருடமாக இருந்த 'தமிழ் கூட்டமைவு' என்பதை அழித்தவர் என்று கல்வெட்டு குறிப்பிடுவது யாரை?

A) அசோகர் B) பிம்பிசாரர் C) கனிஷ்கர் D) காரவேலர்

**105)** கோவலன் கண்ணகி மதுரைக்கு நடந்துசென்ற பாதையில் (மேற்குத் தொடர்ச்சி மலை வரை) நடை பயணத்தை மெற்கொண்டு சிலப்பதிகார உண்மைகளை ஆய்வுசெய்தவர் யார்?

A) எரிக் மில்லர் B) மாக்ஸ் முல்லர்

C) விண்டர் நீட்ஸ் D) ஸ்ட்ராபோ

**106)** திருக்குறளில் குறிப்பிடப்பட்டிருக்கும் மதம் எது?

A) சமணம் B) பௌத்தம்

C) ஆசீவகம் D) எதுவுமில்லை (மதச்சார்பற்ற நூல்)

**107)** எதுவும் நிறைவேறாமல் போனாலும், எது ஒன்றே "திராவிடர் கழகத்தின் லட்சிய வெற்றியாக" இருக்கும் என்று பெரியார் விரும்பினார்?

A) சாதி ஒழிப்பு B) திராவிட நாடு

C) சடங்குகளற்ற திருமணம் D) பெண்களுக்கு சொத்துரிமை

**108)** அரசியல் கேலிச் சித்திரத்துடன் வெளியிடப்பட்ட தமிழ் நாட்டின் முதல் நாளேடு

A) இந்து B) இந்தியா

C) சுதேசமித்திரன் D) பாலபாரதம்

**109)** "செம்புலப் பெயர் நீர் போல" என்னும் வரிகள் இடம்பெறும் நூல்?

A) நற்றிணை B) குறுந்தொகை

C) பரிபாடல் D) நெடுநல்வாடை

**110)** நட்பின் இயல்பு குறித்து "உயிர்ஓர் அன்ன செயிர்தீர் நட்பின்" என்னும் நூல்?

A) நற்றிணை B) குறுந்தொகை

C) பரிபாடல் D) நெடுநல்வாடை

ETW ACADEMY

**111)** கூற்று: 1992-ம் ஆண்டு, இந்திய பொருளாதாரத்தில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

காரணம்: ஒரு பெரிய பொருளாதார நெருக்கடியை இந்தியா சந்தித்தது. எனவே இந்தியா புதிய பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்டுவர வேண்டியிருந்தது

A) கூற்றும் காரணமும் சரி; மேலும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே

B) கூற்று சரி; ஆனால் காரணம் தவறு

C) கூற்று தவறு; ஆனால் காரணம் சரி

D) கூற்றும் காரணமும் தவறு

**112)** தாராளமயமாக்கலின் எதிர்மறை விளைவுகள் எவை?

I) வேலையின்மை அதிகரிப்பு

II) வரி வரவு குறைவு

III) உள்நாட்டு உற்பத்தி குறைவு

A) I & III
B) II & III
C) I & II
D) மேற்கண்ட அனைத்தும்

**113)** பின்வரும் கூற்றுகளில் எவை சரி?

1. சேர மன்னர்களின் வணிகமுறை, ஆட்சி, போர்திறம் பற்றியெல்லாம் கூறும் சங்க நூல் பட்டினப்பாலை ஆகும்

2. இசைப்பாடல் என்று அழைக்கப்படுவது கூத்தராற்றுப்படை

3. பத்துப்பாட்டில் உள்ள ஆற்றுப்படை நூல்கள் மொத்தம் ஆறு

A) 1 & 2
B) 1 & 3
C) 2 & 3
D) மேற்கண்ட எதுவுமில்லை

**114)** மிளகை இந்திய மருந்து என்று குறிப்பிட்டவர்?

A) தாலமி B) பிளினி C) ஹிப்போகிரேட்டஸ் D) பாகியான்

**115)** இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி பங்களிப்பில் தமிழ்நாடு எந்த இடத்தில் உள்ளது?

A) முதலாவது B) இரண்டாவது C) மூன்றாவது D) ஐந்தாவது

**116)** மனித வளர்ச்சி குறியீட்டில் இந்திய அளவில் தமிழ்நாடு வகிக்கும் இடம்?

A) மூன்றாமிடம் B) முதலிடம் C) ஏழாமிடம் D) ஐந்தாமிடம்

**117)** சுவாசித்தல்

A) வெப்ப உமிழ் வினை
B) வெப்பக் கொள் வினை
C) A & B
D) ஏதுமில்லை

**118)** சர்வதேச புலிகள் தினம்?

A) ஜூலை 28 B) ஜூலை 29 C) ஜூலை 30 D) ஜூலை 31

**119)** ஜேக்கோபியர் கழகம் தோற்றுவிக்கப்பட்ட இடம்?

A) பாரமஹால்
B) மைசூர்
C) ஸ்ரீரங்கப்பட்டிணம்
D) திண்டுக்கல்

ETW ACADEMY

120) வேலூர் கலகத்திற்கான காரணங்களில் சரியானது எது?

1. கடுமையான கட்டுப்பாடுகள், புதிய ஆயுதங்கள், புதிய முறைகள் மற்றும் சீருடைகள் என அனைத்தும் சிப்பாய்களுக்கு புதிதாக இருந்தன

2. தாடி, மற்றும் மீசையை மழித்து நேர்த்தியாக வைத்துக்கொள்ள சிப்பாய்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

3. சமய அடையாளத்தை நெற்றியில் அணிதல், காதுகளில் வளையம் (கடுக்கன்) அணிதல் ஆகியன தடைசெய்யப்பட்டன.

4. ஆங்கிலேயர்கள், இந்திய சிப்பாய்களை தாழ்வாக நடத்தியதோடு மட்டுமல்லாமல் சிப்பாய்களிடையே இனபாராபட்சமும் காட்டினர்.

A) 1, 3, 4 மட்டும் சரி B) 1, 4 மட்டும் சரி C) 1, 3 மட்டும் சரி D) அனைத்தும் சரி

121) பண்டைய தமிழகத்தில் விதிக்கப்பட்ட பல்வேறு வகையான வரிகளைப் பற்றி கூறும் பத்துப்பாட்டு நூல்?

A) மதுரைக்காஞ்சி B) முல்லைப்பாட்டு C) பட்டினப்பாலை D) நெடுநல்வாடை

122) ஔவையார் என்றால் என்ன பொருள்?

A) வயதானப் பெண்
B) அறிவில் சிறந்து விளங்கும் பெண்
C) கல்வி கேள்வியில் சிறந்த பெண்
D) மதிப்பிற்குரிய பெண்

123) உண்மையான செல்வம் பிறர்துன்பம் தீர்ப்பதுதான் என்றவர்?

A) மாங்குடி மருதனார் B) கபிலர் C) பெருங்கடுங்கோ D) நல்வேட்டனார்

124) வாய்மையை "பிழையா நன்மொழி" எனும் நூல்?

A) நற்றிணை B) குறுந்தொகை C) பரிபாடல் D) நெடுநல்வாடை

125) பின்வரும் எந்தக் குழுவின் அறிக்கை, இறக்குமதிக்கான தீர்வைகளை பெருமளவு குறைக்கப் பரிந்துரை செய்துள்ளது?

A) ராஜா செல்லையா குழு B) நீதிபதி கே. ராஜன் குழு C) சற்குணம் குழு D) சந்தாணம் குழு

126) 1965 ஆம் ஆண்டில் ஆசியாவின் முதல் ஏற்றுமதி செயலாக்க மண்டலத்தை இந்தியா துவங்கிய இடம் எது?

A) நொய்டா B) சூரத் C) ஃபால்டா D) காண்ட்லா

127) யாமத்தை சிறுபொழுதாகக் கொண்ட திணை?

A) குறிஞ்சி B) முல்லை C) மருதம் D) பாலை

128) மெற்குத் தொடர்ச்சி மலையும் கிழக்குத் தொடர்ச்சி மலையும் ஈனையும் பகுதி?

A) கன்னியாகுமரி
B) ஆனைமலை
C) நீலகிரி
D) கல்வராயன் மலை

129) இந்தியாவின் பெரிய மாநிலங்களைப் பொருத்தவரை, உயர் கல்வியில் மொத்த சேர்க்கை விகிதத்தில் இந்திய அளவில் முதலிடத்தில் உள்ள மாநிலம்?

A) தமிழ்நாடு
B) கேரளம்
C) பஞ்சாப்
D) மகாராஷ்டிரா

ETW ACADEMY

130) பின்வரும் எதில் தமிழகம் இந்திய அளவில் முதலிடம் வகிக்கவில்லை?

A) குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான (MSMEs) முதலீட்டுத் திட்டங்களில்

B) தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில்

C) உதிரி பூக்கள் உற்பத்தியில்

D) தேங்காய் உற்பத்தியில்

131) விளம்பரங்களில் பயன்படும் குழல் விளக்குகளில் பயன்படுத்தப்படும் வாயு?

A) கிரிப்பான் B) நியான் C) ஆர்கான் D) செனான்

132) புளி மற்றும் திராட்சை ஆகியவற்றில் உள்ள அமிலம்?

A) மாலிக் அமிலம் B) கோலிக் அமிலம்

C) ஆக்ஸாலிக் அமிலம் D) டாட்டாரிக் அமிலம்

133) சிப்பாய் கலகம் நடைபெற்ற இடங்களையும், இந்தியத் தலைவர்களையும் பொருத்துக:

(i) லக்னோ - 1. கன்வர் சிங்

(ii) கான்பூர் - 2. கான் பகதூர் கான்

(iii) குவாலியர் - 3. பேகம் ஹஸ்ரத் மகால்

(iv) பரெய்லி - 4. நானா சாகிப்

(v) பீகார் - 5. தாந்தியா தோபே

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 2 | 5 | 1 |
| B) | 2 | 3 | 4 | 5 | 1 |
| C) | 2 | 4 | 5 | 3 | 1 |
| D) | 3 | 4 | 5 | 2 | 1 |

134) இந்தியாவின் கடைசி தலைமை ஆளுநர் யார்? இந்தியாவின் முதல் வைஸ்ராய் (அரசப் பிரதிநிதி) யார்?

A) வெல்லெஸ்லி, வெல்லெஸ்லி B) கானிங், கானிங்

C) வெல்லெஸ்லி, கானிங் D) கானிங், வெல்லெஸ்லி

135) பொருட்பாலில் அரசனது இயல்பு கூறும் 25 அதிகாரங்களில் 'அரசர்', 'வேந்தர்', 'நிலன்', ஆண்டவர்', 'மன்னவர்' முதலான பெயர்களால் எத்தனை முறை திருவள்ளுவர் ஆட்சித்தலைவனை சுட்டிக் கூறியுள்ளார்?

A) 64 B) 38 C) 46 D) 54

136) பாரதியார் "சுதேச கீதங்கள்" எனப்படும் உணர்ச்சிமிக்க பாடல் தொகுப்பை வெளியிட்ட ஆண்டு மற்றும் "சுயராஜ்ய தினம்" கொண்டாடுவதற்காக சென்னையில் மிகப்பெரிய பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்த ஆண்டு??

A) 1906 B) 1908 C) 1911 D) 1910

137) உண்டாலம்ம இவ்வுலகம் என்ற அடிகள் பயின்று வரும் நூல்?

A) பதிற்றுப்பத்து B) சிலப்பதிகாரம் C) நற்றிணை D) புறநானூறு

ETW ACADEMY

138) பதினெண்கீழ்கணக்கு நூல்களில் உள்ள அகநூல்கள், புறநூல்கள், அறநூல்கள் முறையே எத்தனை?

A) 6, 1, 11 B) 7, 2, 9 C) 11, 1, 6 D) 6, 1, 11

139) பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை பிற தனியார் நிறுவனங்கள் அல்லது வங்கிகளுக்கு விற்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) முதலீட்டு விலக்கல் (DISINVESTMENT)
B) முதலீட்டுக் கூட்டல் (PROINVESTMENT)
C) முதலீட்டுக் திருப்பல் (REVERSEMENT)
D) மேற்கண்ட எதுவுமில்லை

140) ஆசிய நாடுகளில், மொத்த உற்பத்தியின் அடிப்படையில் இந்தியா எவ்விடத்தில் உள்ளது?

A) முதலாவது B) இரண்டாவது C) மூன்றாவது D) நான்காவது

141) எது பாண்டியர்கால பட்டயம் அல்ல?

A) வேள்விகுடி செப்பேடு
B) தளவாய்புரம் செப்பேடு
C) லெய்டன் பட்டயம்
D) சின்னமனூர் சாசனம்

142) "வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ்கூறும் நல்லுலகத்து" என்ற அடிகள் பயின்று வரும் நூல்?

A) தொல்காப்பியம்
B) நன்னூல்
C) சிலப்பதிகாரம்
D) புறபொருள் வெண்பா மாலை

143) 2019-ம் ஆண்டின் சிறந்த மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்?

A) பிரமோத் பகத்
B) ராஜீவ் சுக்லா
C) மாரியப்பன் தங்கவேல்
D) சாக்ஷி மாலிக்

144) கொடை வழங்கும் பானை கண்டெடுக்கப்பட்டுள்ள இடம்?

A) கீழடி
B) அகரம்
C) கங்கை கொண்ட சோழபுரம்
D) மயிலாடும்பாறை

145) மனித உடலில் ஏறத்தாழ எத்தனை சதவீதம் ஆக்சிஜன், கார்பன், ஹைட்ரஜன், நைட்ரஜன், கால்சியம் மற்றும் பாஸ்பரஸ் ஆகிய 6 தனிமங்களால் ஆனது?

A) 85% B) 90% C) 95% D) 99%

146) தவறான இணை எது?

A) ஹேமடைட் - இரும்பு அதிகம் உள்ள தாது
B) ஆஸ்மியம் - அடர்த்தி மிகுந்த தனிமம்
C) ஹீலியம் - மிகவும் லேசான தனிமம்
D) வைரம் - மிகவும் கனமான தனிமம்

147) விவசாயிகளின் எழுச்சியாகக் கருதப்பட்ட முதலாவது கலகம் எது?

A) சந்தால் கலகம்
B) இண்டிகோ கலகம்
C) பாப்னா கலகம்
D) பஞ்சாப் விவசாயிகள் கலகம்

148) கேடா சத்தியாகிரகத்துக்கு தலைமை தாங்கியவர் யார்?

A) வல்லபாய் படேல்
B) மொராஜி தேசாய்
C) காந்தியடிகள்
D) திலகர்

ETW ACADEMY

149) திருக்குறளுக்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கப்படும் நீதிநூல்?

A) ஏலாதி B) திணைமாலை நூற்றைம்பது
C) நாலடியார் D) நான்மணிக்கடிகை

150) தமிழில் விருத்தப்பாவில் தோன்றிய முதல் காப்பியம்?

A) சிலப்பதிகாரம் B) மணிமேகலை C) வளையாபதி D) சீவக சிந்தாமணி

151) 1991இன் புதிய தொழிற்கொள்கையானது, பின்வரும் எம்முறையை முடிவுக்குக் கொண்டுவந்தது?

A) சிவப்பு நாடா முறை B) பச்சை நாடா முறை
C) நீல நாடா முறை D) ஊதா நாடா முறை

152) பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் (The Pradhan Mantri Fasal Bima) அறிமுகப்படுத்தப்பட்டது எப்போது?

A) 14 செப்டம்பர் 2016 B) 15 ஆகஸ்ட் 2015 C) 18 பிப்ரவரி 2016 D) 22 டிசம்பர் 2015

153) சரியானவை எவை?

1. வினையே ஆடவர்க்குயிர் என்னும் நூல் நற்றிணை
2. விருந்து என்பதன் பொருள் "புதியது" என்று கூறும் நூல் தொல்காப்பியம்
3. தொல்லோர் சிறப்பின் என விருந்துக்கு அடைமொழி தந்த நூல் சிலப்பதிகாரம்

A) 1 & 2 B) 2 & 3 C) 1 & 3 D) 1, 2 & 3

154) பெரும்பொழுதுகளில் பொருந்தா இணை?

A) குறிஞ்சி - கூதிர், முன்பனி B) முல்லை - பெரும்பொழுதுகள் ஆறும்
C) மருதம் - பெரும்பொழுதுகள் ஆறும் D) நெய்தல் - பெரும்பொழுதுகள் ஆறும்

155) நிதி ஆயோக் 2018 அறிக்கையின்படி, சுகாதாரக் குறியீட்டில் முதலிடம் வகிக்கும் மாநிலம்?

A) தமிழ்நாடு B) பஞ்சாப் C) கேரளம் D) மகாராஷ்டிரா

156) நிதி ஆயோக் 2018 அறிக்கையின்படி, தமிழகத்தில் பச்சிளங் குழந்தை இறப்பு வீதம்?

A) 14 B) 21 C) 17 D) 20

157) தவறான இணை?

A) மாங்கனீசு சுரங்கம் - கரூர் B) பாக்சைட் சுரங்கம் - ஏற்காடு
C) இரும்புத்தாது சுரங்கம் - கஞ்சமலை D) மாலிப்டினம் - கரடிக்குட்டம்

158) 1800-1801ஆம் ஆண்டு கிளர்ச்சி ஆங்கில ஆவணங்களில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது?

A) மருது சகோதரர்கள் கிளர்ச்சி B) இரண்டாம் பாளையக்காரர் போர்
C) திருச்சி போர் D) மூக்கறுப்புப் போர்

159) சென்னை மாகணத்தில் தொழிலாளர் அமைப்புகளை ஏற்படுத்துவதில் முன்னோடியாக இருந்தவர்?

A) எஸ்.ஏ. டாங்கே B) லட்சுமி நரசு C) டாக்டர் நடேசனார் D) ம.சிங்காரவேலர்

160) இந்தியாவின் முதல் உழைப்பாளர் தினத்தை சிங்காரவேலர் சென்னையில் நடத்திக்காட்டிய நாள்?

A) 1923 மே 1 B) 1921 மே 1 C) 1923 மே 31 D) 1921 மே 31

**161)** IMF அவுட்லுக் ஏப்ரல் 2017 அறிக்கையின்படி, நம் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியானது வாங்கும் சக்தியின் அடிப்படையில் எந்த நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குச் சமமாக உள்ளது?

A) ஆஸ்திரேலியா B) நெதர்லாந்து

C) ஐக்கிய அரபு எமிரேட் (UAE) D) கிரீன்லாந்து

**162)** தமிழ்நாடு பொருளாதார மற்றும் புள்ளியியல் இயக்கத்தின் ஆய்வின் படி, நம் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியானது (GDSP) 2016-17 நிதியாண்டில் _____ பில்லியன் டாலராக உள்ளது

A) 198.1 B) 207.8 C) 211.2 D) 178.1

**163)** தமிழ்நாட்டில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) 63.70% பங்களிப்புடன் முதலிடத்தில் உள்ளத் துறை?

A) வேளாண்துறை B) தொழில்துறை

C) சேவைத்துறை D) மேற்கண்ட எதுவுமில்லை

**164)** கல்வியே அனைத்து அறங்களுக்கும் அடிப்படை என்றவர் யார்?

A) கம்பர் B) கபிலர்

C) ஒட்டக்கூத்தர் D) திருத்தக்கத்தேவர்

**165)** பொறுமை என்னும் அறத்தை வெளிப்படுத்தும் இதிகாசம்?

A) மகாபாரதம் B) வில்லிபாரதம்

C) இராமாயணம் D) மேற்கண்ட அனைத்தும்

**166)** இந்தியா உலக அளவில், காய்கறிகள் உற்பத்தியில் எத்தனையாவது மிகப் பெரிய உற்பத்தியாளராக விளங்குகிறது?

A) முதலாவது B) இரண்டாவது C) மூன்றாவது D) நான்காவது

**167)** தாராளமயமாக்கபடுவதற்கு முன் நாடு முழுவதும் விவசாயிகள் எங்கிருந்து விதைகளைப் பெற்று வந்தனர்?

A) மத்திய அரசாங்க நிறுவனங்களிலிருந்து B) மாநில அரசாங்க நிறுவனங்களிலிருந்து

C) தனியார் நிறுவனங்களிலிருந்து D) கூட்டுறவு நிறுவனங்களிலிருந்து

**168)** தொல்காப்பியம் கூறும் புறத்திணைகளின் எண்ணிக்கை என்ன? புறத்திணைகள் 12 எனக்கூறும் நூல் எது?

A) 12, புறப்பொருள் வெண்பாமாலை B) 12, தொல்காப்பியம்

C) 7, நன்னூல் D) 7, புறப்பொருள் வெண்பாமாலை

**169)** பொருந்தா இணை எது?

A) திருமுடிக்காரி - கண்டீர மலை B) ஆய் அண்டிரன் - பொதியமலை

C) ஓரி - கொல்லிமலை D) அதியமான் - தகடூர்

**170)** தமிழ் நாட்டின் தனிநபர் வருமானம் _____ டாலர்களுடன், இந்தியாவில் உள்ள பல மாநிலங்களைக் காட்டிலும், உயர்வாக உள்ளது.

A) 2200 B) 2400 C) 3100 D) 2000

**171)** உணவு தானிய உற்பத்திப் பரப்பு 2013-14ல் தமிழகத்தில் எத்தனை இலட்சம் ஹெக்டேர்களாக இருந்தது?

A) 72.9% B) 58.97% C) 83.12% D) 68.52%

**172)** கொடுக்கப்பட்டுள்ளவைகளில், அறங்கூறு அவையம் பற்றிக் கூறும் நூல்கள் எவை?

1. தொல்காப்பியம்
2. புறநானூறு
3. மதுரைக்காஞ்சி

A) 1 & 2 B) 2 & 3 C) 1 & 3 D) 1, 2 & 3

**173)** "முறையுடை அரசன் செங்கோல் அவையத்து" என்ற அடிகள் பயின்றுவரும் நூல்?

A) அகநானூறு B) சிலப்பதிகாரம் C) நற்றிணை D) குறுந்தொகை

**174)** சிவாலயங்களில் பாடப்படுபவை?

1. தேவாரம்
2. திருவாசகம்
3. நாலாயிர திவ்விய பிரபந்தம்

A) 1 & 2 B) 2 & 3 C) 1 & 3 D) 1, 2 & 3

**175)** சரியான வாக்கியம் எது (வை)?

1. முருகனை வழிபட்டு ஆடும் கூத்து குன்றக்குரவை
2. திருமாலை வழிபட்டு ஆடுவது - ஆய்ச்சியர் குரவை
3. சிவன் ஆடும் கூத்து - தாண்டவம்

A) 1 & 2 B) 2 & 3 C) 1 & 3 D) 1, 2 & 3

**176)** ரூபாய் இரண்டாயிரத்திற்கு 10% வட்டி விகிதத்தில் 73 நாட்களுக்கு கிடைக்கும் வட்டி எவ்வளவு?

A) ரூ. 40 B) ரூ. 50 C) ரூ. 55 D) ரூ. 45

**177)** ரூபாய் 800 ஆனது 3 ஆண்டுகளில் தனிவட்டி வீதத்தில் 920 என்று மாறுகிறது. அதே தொகையில் வட்டிவீதத்தை 3% கூட்டினால் அசல் தொகையுடன் வட்டியும் சேர்த்து எவ்வலவு தொகை கிடைக்கும்?

A) 992 B) 1002 C) 998 D) 988

**178)** ஒரு தொகையானது மூன்று வருடங்களில் ரூபாய் 725 ஆகவும் நான்கு வருடங்களில் ரூபாய் 800 ஆகவும் மாறுகிறது எனில் அந்தத் தொகை எவ்வளவு?

A) 550 B) 600 C) 500 D) 650

**179)** ஆயிரம் ரூபாய்க்கான தனிவட்டியினை 3 நபர்களுக்கு 1 வருடத்திற்கு முறையே 5%, 6%, 8% வட்டிவீதத்தில் அளித்தால், கடன் அளித்தவருக்கு கிடைக்கும் மொத்த வட்டித்தொகை யாது?

A) 215 B) 190 C) 210 D) 200

**180)** ஒரு குறிப்பிட்ட தொகையின் தனிவட்டி அசலைப்போல் 16/25 பங்கு. மேலும் காலமும் வட்டிவீதமும் சமம் எனில் வட்டி வீதம் மற்றும் காலத்தை கண்டறி

A) 7.5 B) 6.5 C) 7 D) 8

**181)** ஒரு தொகையின் தனிவட்டி 3 வருடங்களில் அத்தொகையின் 1/4 பங்கு எனில் வட்டி வீதம்?

A) 8 1/3% B) 8 2/3% C) 9 1/2% D) 8 3/4%

ETW ACADEMY

182) ஒரு தொகையானது 10 வருடங்களில் இரட்டிப்பாகிறது எனில் அதே தொகை எத்தனை வருடங்களில் நான்கு மடங்காக மாறும்?

A) 25 ஆண்டுகள் B) 30 ஆண்டுகள் C) 35 ஆண்டுகள் D) 40 ஆண்டுகள்

183) ஒரு தொகை தனிவட்டி வீதத்தில் 15 வருடங்களில் 4 மடங்கு ஆகிறது எனில் வட்டிவீதம் எவ்வளவு?

A) 17% B) 18% C) 20% D) 28%

184) ஒரு தொகையை 5% தனிவட்டிவீதத்தில் முதலீடு செய்தால் அந்தத் தொகை 40% ஆக அதிகரிக்கும் காலம் என்ன?

A) 8 ஆண்டுகள் B) 10 ஆண்டுகள் C) 9 ஆண்டுகள் D) 7 ஆண்டுகள்

185) ஒரு தொகை தனிவட்டி வீதத்தில் இரண்டு மடங்காக மாற 6 ஆண்டுகள் ஆகிறது எனில் நான்கு மடங்காக மாற எத்தனை ஆண்டுகள் ஆகும்?

A) 12 B) 24 C) 36 D) 18

186) ஒரு குறிப்பிட்ட தொகையினை 4% வட்டிவீதத்தில் 4 வருடங்களுக்கு வைப்புத்தொகையாக வைக்கப்பட்டால் கிடைக்கும் தனிவட்டி 200 எனில் அந்தத் தொகை யாது?

A) ரூ. 1250 B) ரூ. 1300 C) ரூ. 1250 D) ரூ. 1200

187) ஒரு வருடத்தில் ரூபாய் 5000 ஆனது ரூபாய் 5500 ஆகிறது எனில் ரூபாய் 7000 ஆனது அதே வட்டிவீதத்தில் 5 வருடங்களுக்குப் பெறும் வட்டி யாது?

A) 3500 B) 4000 C) 3800 D) 4200

188) ஒரு குறிப்பிட்ட தொகையை தனிவட்டியில் 6 ஆண்டுகளுக்கு கொடுக்கும்போது தனிவட்டி அந்தத் தொகையில் பாதி எனில் வட்டிவீதம் எவ்வளவு?

A) 7 1/3% B) 8 1/3% C) 7 1/2% D) 8 1/2%

189) ஒருவர் ரூபாய் எட்டாயிரத்திற்கு 15% கூட்டுவட்டியில் இரண்டு வருடம் நாங்கு மாதம் முடிவில் அவர் பெறும் வட்டித்தொகை எவ்வளவு?

A) 3109 B) 3209 C) 3119 D) 3219

190) ரூபாய் 100 ஆனது 10% கூட்டுவட்டி வீதத்தில் ரூபாய் 1331 ஆக மாற எத்தனை ஆண்டுகள் ஆகும்?

A) 3 B) 4 C) 5 D) 2

191) அசல் ரூ.18000 க்கு கூட்டுவட்டிக்கும் தனிவட்டிக்கும் உள்ள வட்டி வித்யாசம் இரண்டு ஆண்டுகளில் ரூபாய் 405 அனில் வட்டிவீதம் என்ன?

A) 5% B) 10% C) 15% D) 20%

192) ஒருவர் ஒரு தொகையை கூட்டுவட்டி வீதத்தில் வங்கியில் முதலீடு செய்கிறார். அவருக்கு மூன்று வருட முடிவில் ரூபாய் 6690 மற்றும் ஆறு வருட முடிவில் ரூ 10035 கிடைக்கிறது எனில் அவர் வங்கியில் முதலீடு செய்த தொகை எவ்வளவு?

A) 4060 B) 4860 C) 4860 D) 4460

193) தனிவட்டி வீதத்திற்கும் கூட்டுவட்டி வீதத்திற்கும் உள்ள இரண்டு வருட வட்டி வித்யாசம் ரூபாய் 631. வட்டிவீதம் 10% எனில் அசல் தொகை எவ்வளவு?

A) 65300 B) 63100 C) 56200 D) 59100

ETW ACADEMY

**194)** ஒருவர் கூட்டுவட்டி வீதத்தில் ஒரு தொகையை முதலீடு செய்து 15 வருட முடிவில் இரண்டு மடங்கு ஆகிறது எனில் எத்தனை ஆண்டுகளில் 8 மடங்காக மாறும்?

A) 45 B) 25 C) 55 D) 35

**195)** ஒரு வாகனத்தின் மதிப்பு ஒவ்வொரு ஆண்டும் 10% குறைகிறது. தற்போது அதன் விலை ரூபாய் 729 எனில் 3 வருடங்களுக்கு முந்தைய விலை என்ன?

A) 1200 B) 900 C) 1100 D) 1000

**196)** 5000 ரூபாயானது ஒரு குறிப்பிட்ட வட்டிவீதத்தில் 2 ஆண்டுகள் வங்கியில் வைக்கப்படுகிறது. அத்தொகைக்கு கூட்டுவட்டியில் கிடைக்கும் வட்டிக்கும் தனிவட்டியில் கிடைக்கும் வட்டிக்கும் உள்ள வித்யாசம் 50 எனில் அதன் வட்டிவீதம் என்ன?

A) 10.5% B) 10% C) 12.5% D) 12%

**197)** ரூபாய் 800 ஆனது 20% கூட்டு வட்டி வீதத்தில் ஒரு ஆண்டு காலத்திற்கு கொடுக்கப்படுகிறது. வட்டி அரையாண்டுக்கு ஒரு முறையும், காலாண்டுக்கு ஒரு முறையும் என்று கணக்கிடப்படுகிறது எனில் வட்டியின் வித்யாசம் என்ன?

A) 4.00 B) 4.20 C) 4.40 D) 4.60

**198)** ஒரு குறிப்பிட்டத் தொகை 6 ஆண்டுகளில் 4 மடங்காகிறது எனில் அது 256 மடங்காக மாற எத்தனை ஆண்டுகளாகும்?

A) 24 B) 12 C) 36 D) 18

**199)** ஒரு குறிப்பிட்டத் தொகை 5 ஆண்டுகளில் 3 மடங்காகிறது எனில் அது 27 மடங்காக மாற எத்தனை ஆண்டுகளாகும்?

A) 10 B) 15 C) 20 D) 25

**200)** ஒரு குறிப்பிட்ட தொகையானது 10% வட்டிவீதத்தில் 3 ஆண்டுகளுக்கு கணக்கிடப்படுகிறது. கூட்டுவட்டிக்கும் தனிவட்டிக்கும் உள்ள வித்யாசம் 115 எனில் அதன் அசல் தொகை என்ன?

A) 8000 B) 12000 C) 5000 D) 10000

***

© ETW Academy